கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞர் கைவினைத் திட்டம் என்ற மாபெரும் திட்டத்தை துவக்கி வைக்க வருகிற 19ஆம் தேதி அன்று குன்றத்தூருக்கு வருகைத் தர உள்ளதை முன்னிட்டு நடைபெற்ற ஆலந்தூர் வடக்கு பகுதி பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு நிகழ்ச்சி ஏற்பாடுகள் மற்றும் வரவேற்பு குறித்து ஆலோசனை செய்தார். அருகில் ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் ப.குணாளன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், வட்டச் செயலாளர்கள் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் உள்ளனர்.

திண்டிவனம் தண்டீஸ்வரர் கோயில் – ஆடவல்லீஸ்வரர் கோயில் குடமுழுக்குகள்!

பட்டுக்கோட்டை - கண்டேஸ்வரர் திருக்கோயிலில் திருமண மண்டபம் கட்டும் பணி!

பேரவையில் – உறுப்பினர்களின் வினாக்களுக்கு – அமைச்சர் பி.கே.சேகர்பாபு பதில்!

சென்னை, ஏப். 16- தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று (15.04.2025) வினா விடை நேரத்தின்போது, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு திண்டிவனம் சட்டமன்ற உறுப்பினர் பொ.அர்ஜுனன், பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் கே.அண்ணாதுரை, வீரபாண்டி சட்டமன்ற உறுப்பினர் எம். இராஜமுத்து ஆகியோர் எழுப்பிய வினாக்களுக்கு பதிலளித்தார்.

அதன் விவரம் வருமாறு:

பொ.அர்ஜுனன் : திண்டிவனம் தொகுதி, ஒலக்கூர் ஒன்றியம், அண்டப்பட்டு கிராமத்தில் உள்ள திரௌபதியம்மன் திருக்கோயிலில் ஒருகால பூஜை நடத்த அரசு ஆவன செய்யுமா?

அமைச்சர் பி.கே.சேகர்பாபு : மகாபாரத பஞ்ச பாண்டவர்கள் ஒருவரான அர்ஜுனன் பெயரை தாங்கி இருக்கின்ற சட்டப் பேரவை உறுப்பினர் அர்ஜுனன் திரௌபதி அம்மனுக்கு வேண்டுகோளை வைத்திருக்கின்றார். துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத கோயில் என்றாலும் அவர் வேண்டுகோளை நிறைவேற்றுகின்ற வகையில் ஊர் மக்களிடம் கலந்து பேசி துறையின் கட்டுப்பாட்டில் அந்த திருக்கோயிலை கொண்டு வந்தால் நிச்சயம் ஒருகால பூஜை திட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு நித்திய பூஜைகள் நடைபெறுவதற்கு வழிவகை காணப்படும்.

பொ.அர்ஜுனன் : என்னுடைய திண்டிவனம் தொகுதி மரக்காணத்தில் இராஜராஜ சோழனால் தஞ்சை பெரிய கோயில் கட்டுவதற்கு முன்பே 12 ஆண்டுகள் முன்பு கட்டப்பட்ட பழமையான பூமீஸ்வரர் திருக்கோயிலுக்கு நான் சட்டப்பேரவையில் வைத்த கோரிக்கை அடிப்படையில் சமீபத்தில் குடமுழுக்கு சிறப்பாக நடைபெற்றது. பொதுமக்கள் அதிக அளவில் வந்து செல்கின்றார்கள். ஆகையால் அக்கோயிலில் அன்னதானத் திட்டம் செயல்படுத்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு : உறுப்பினர் அவர்கள் கூறிய பூமீஸ்வரர் திருக்கோயிலுக்கு பக்தர்கள் கூட்டம் குறைவாக வருகின்ற காரணத்தினால் முதல்வர் அவர்களின் உத்

தரவு பெற்று இந்த ஆண்டு அன்னதானத் திட்டத்தில் அந்த திருக்கோயில் சேர்த்துக் கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

பொ.அர்ஜுனன் : திண்டிவனத்தில் அமைந்துள்ள தண்டீஸ்வரர் கோயில் மற்றும் முன்னூர் ஊராட்சி, ஆடவல்லீஸ்வரர் கோயில் குடமுழுக்கு நடைபெறும் என மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது. அப்பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அப்பணிகள் எப்போது நிறைவு பெற்று குடமுழுக்கு நடைபெறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு : உறுப்பினர் அவர்கள் கூறிய ஆடவல்லீஸ்வரர் கோயில் என்பது சுமார் 1978 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்ற திருக்கோயில் ஆகும். தற்போது திராவிட மாடல் ஆட்சியில் இப்படி காலம் கடந்து திருப்பணிகள் மேற்கொள்ளப்படாத திருக்கோயில்களை திருப்பணிக்கு எடுத்துக்கொள்ள முதல்வர் அவர்களின் உத்தரவிட்டதன் பேரில் அத்திருக்கோயிலில் 18 லட்சம் ரூபாய் செலவில் திருப்பணிகள் நடந்து வருகின்றன. மேலும், அத்திருக்கோயிலுக்கு புதிய ஏழுநிலை கருங்கல் இராஜகோபுரம் 4.45 கோடி ரூபாய் செலவில் உபயதாரர் நிதியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதில் 70 சதவீத பணிகள் முடிவுற்றுள்ளன. இந்த இரண்டு திருப்பணிகளும் வருகின்ற ஜூலை மாதத்திற்குள் நிறைவு பெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கே.அண்ணாதுரை : கடந்த 2021 ஆம் ஆண்டு மானிய கோரிக்கையில் பட்டுக்கோட்டை தொகுதி தாமரங்கோட்டை ஊராட்சி கண்டேஸ்வரர் திருக்கோயில் இடத்தில் ஒரு திருமண மண்டபம் சுமார் 3.75 கோடி ரூபாய் கட்டி தருவதாக அமைச்சர் உறுதி அளித்து அந்த திருக்கோயிலில் போதுமான நிதி இல்லாததால் திருச்சி மாவட்டம் சமயபுரம், மாரியம்மன் கோயிலிருந்து இரண்டரை கோடி ரூபாய் நிதி பெற்று மண்டபம் நிறைவுபெறும் நிலையில் உள்ளது.

மீதம் உள்ள ஒன்னே கால் கோடி ரூபாய் இது வரை இந்த மண்டபத்திற்குத் தரப்படவில்லை. எனவே இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சமயபுரம் திருக்கோயிலிலிருந்து மேற்படி மண்டபத்திற்கு தர வேண்டிய நிதியை பெற்றுத் தருவாரா?

அமைச்சர் பி.கே.சேகர்பாபு : உறுப்பினர் கோரிய கண்டேஸ்வரர் திருக்கோயிலில் 3.75 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டு வருகின்ற திருமண மண்டபத்தில் 70 சதவீத பணிகள் முடிவுற்றன. மீதம் இருக்கின்ற பணிகளுக்கு அங்கிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இருக்கின்றன. சமயபுரம் திருக்கோயிலில் அந்த பரிந்துரை ஏற்கப்பட்டு மீதமுள்ள நிதியை ஒதுக்கீடு செய்து இந்த ஆண்டு இறுதிக்குள் அந்த திருமண மண்டபம் கட்டுகின்ற பணி முழுமை பெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

எம்.இராஜமுத்து : என்னுடைய வீரபாண்டி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட உத்தமசோழபுரம் கரபுரநாதர் திருக்கோயில் பழமைவாய்ந்த திருக்கோயில். அதற்கு குடமுழுக்குக்காக வருட கணக்கில் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது எப்பொழுது முடிந்து குடமுழுக்கு நடைபெறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு : உத்தமசோழபுரத்தில் அமைந்துள்ள கரபுரநாதர் திருக்கோயில் 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில் ஆகும். அங்கு கருங்கல்லால் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதர திருப்பணி என்றால் குறிப்பிட்ட கால அளவு நிர்ணயித்து அந்த பணிகள் நிறைவு பெறும். கருங்கல் திருப்பணி என்பதால் அதற்கு தேவையான கற்களை கொண்டு வந்து, அதற்கான பணி செய்பவர்களை வைத்து பயன்படுத்தி பணிகள் மேற்கொள்ள வேண்டி இருப்பதால் சற்று காலதாமதம் ஏற்பட்டுள்ளது. அந்த பணியை விரைந்து முடிக்க இணை ஆணையருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சட்டமன்ற கூட்டத்தொடர் முடிந்த பிறகு நான் நேரடியாக அத்திருக்கோயிலுக்கு சென்று ஆய்வு செய்து பணிகளை எவ்வளவு விரைவுப்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவுபடுத்தி இந்த ஆண்டு இறுதிக்குள் குடமுழுக்கு நடத்துவதற்கு உண்டான பணிகளை மேற்கொள்வோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! மேயர் பிரியா ராஜன் தலைமையில்

'மக்கள் முதல்வரின் மனிதநேய விழா' மாபெரும் புகழரங்கம்!

அமைச்சர் எஸ்.ரகுபதி – நடிகர் ரவிமோகன் – நடிகர் கருணாஸ் – நடிகை நளினி புகழுரை!

சென்னை, ஏப்.16- சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், கழக தலைவர் 72 வது பிறந்தநாள் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு எழும்பூர் தெற்கு பகுதி சார்பில் மாபெரும் புகழரங்கம் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, நடிகர்.ரவி மோகன், நடிகர் கருணாஸ், நடிகை நளினி ஆகியோர் புகழுரைத்தனர்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 53, கதிரவனை போற்றும் நட்சத்திரங்கள்! கலையாய் மின்னும் சொற்சித்திரங்கள்!! எனும் தலைப்பில் எழும்பூர் தெற்கு பகுதி சார்பில் மாபெரும் புகழரங்கம் நேற்று (15.04.2025, செவ்வாய்கிழமை) மாலை 6.00 மணியளவில், சென்னை, வேப்பேரி, ரித்தர்டன் ரோடு, B.K.N.ஆடிட்டோரியத்தில் நடைபெற்றது.

இப்புகழரங்கத்தில் சென்னை பெருநகர மேயர் பிரியா ராஜன் தலைமை வகித்தார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதிமாறன் எம்.பி, வி.சுதாகர், சொ.வேலு எம்.சி, ஸ்ரீராமுலு, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, முன்னிலை வகித்தனர்.

தமிழன்பிரசன்னா, கே.எஸ்.இரவிச்சந்திரன், பி.எம்.யாழினி கோ.ஏகப்பன், கே.எஸ்.எம்.நாதன், புனிதவதிஎத்திராசன் எம்.சி, ப.ஸ்ரீராமுலு எம்.சி, சரிதாமகேஷ்குமார் எம்.சி, டாக்டர்.ஜி.சாந்தகுமாரி எம்.சி, சுதாதீனதயாளன் எம்.சி, சாவித்திரிஸ்ரீவீரராகவன், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, எல்.சுந்தர்ராஜன் எம்.சி, பரிதிஇளம்சுருதி எம்.சி, கே.அண்ணபூரணி, கே.வள்ளி, ஆர்.கிருஷ்ணவேணி, எஸ்.விஜயலஷ்மி, கே.எம்.ஸ்நோபா, ஜெ.தேவகிருபை, எஸ்.ஜான்சிராணி, சகினாபேகம், சூர்யாரகு, ஜி.ஜெயசூர்யா, அமுல்பாண்டியன், யு.இலக்கியா, எம்.எழில், எஸ்.விஜயலஷ்மி வரவேற்றனர்.

இம்மாபெரும் விழாவில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, நடிகர்.ரவி மோகன், நடிகர். கருணாஸ், நடிகை.நளினி ஆகியோர் புகழுரைத்தனர்.

மேலும், இப்புகழரங்கத்தில் பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், எஸ்.மணிமுடி, வே.உமாகாந்த், சங்கரிநாராயணன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, தேவ ஜவஹர், ஜி.மகாதேவன், இசட்.ஆசாத், கூ.பி.ஜெயின், எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர், செ. தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, வே.வாசு, வ.முரளிதரன், எ.நாகராசன், டி.எஸ்.பி.இராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ். புரசை கோ.மணி, க.நந்தீஸ்வரன், எஸ்.பன்னீர்செல்வம், த.வ.செம்மொழி, பி.ஜெ.துளசிங்கம், பி.உதயசங்கர், வி.ரமேஷ், எம்.இப்ராஹிம்கனி, டாக்டர் ஏ.பி.பூர்ணிமா, இரா.கலைச்செல்வி. எம்.தாவூத்பீ, கே.சாரதா, லதாவாசு, எல்.ரமணி, எஸ்.தமிழ்செல்வி, டி.யோகபிரியா, பி.அமுதா, எஸ்.உமா, சி.ஸ்ரீதேவி, என்.உஷாநாகராஜ், கே.பொற்கொடி, மு.சரவணன், எம்.கமல், எம்.இ.சேகர், பி.பரிமளம், ராஜேஸ்ஜெயின், ரமேஷ்(எ) நீலகண்டன், ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், க.வினோத், ஜி.ஜெ.பிரபு, எஸ்.தனசேகர், ஆர்.டி.சங்கர்நானா, வானவில் விஜய், புரசை ஜி.தாமோதரன், நா.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், எல்.பி.எப்.மோகன், துரைகண்ணன், பி.விஜயகுமார், எம்.விநாயகம், ஆர்.எஸ்.சித்திக், க.பா.பிரதீப்குமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், கா.ராஜ்முகமது, கு.கிருஷ்ணமூர்த்தி, து.ஆயிரம், வட்ட கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இப்புகழரங்கத்தில் வி.விஜயகுமார், ஆர்.பாபு நன்றி கூறினார்கள்.

விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில்

அம்பேத்கர் பிறந்த நாள் விழா - சமத்துவ நாள் உறுதிமொழி!

திருவுருவப் படத்திற்கு மலர்தூவி – செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மரியாதை!

செஞ்சி , ஏப். 16 - சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 135 வது பிறந்த நாள் விழா நேற்று முன்தினம் நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. அந்த வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் டாக்டர் அம்பேத்கரின் பிறந்தநாள் விழா செஞ்சி பேருந்து நிலையம்,மற்றும் செஞ்சி கூட்டு சாலையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் தலைமையில் ஒன்றிய பெருந் தலைவர் விஜயகுமார் செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் செஞ்சி கூட்ரோட்டில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த டாக்டர் அம்பேத்கரின் திருவுருவப்படத்தி ற்குவிழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமையில் சமத்துவ நாள் உறுதி மொழியை தி.மு.க. நிர்வாகிகள் பொதுமக்கள் ஏற்றுக் கொண்டனர்.

நிகழ்ச்சியில் மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை, ஒன்றிய துணை செயலாளர் செல்வமணி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மோகன், நூர்ஜகான், ஜாபர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாலகிருஷ்ணன் வார்டு செயலாளர் ஜி.டி.தனசேகரன், நிர்வாகிகள் சம்பத்குமார், ராம்குமார், சந்திரன், தொண்டரணி பாஷா, ஜாபர், மகாதேவன், உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மாநில உரிமைக்கான சட்டப்போராட்டத்தில் வெற்றி!

குவைத் மாநகரில் கழக அயலக அணியினர் கொண்டாட்டம்!

க.சிந்தாபக்கீர் – சொ.ஆறுமுகம் – ஓ.வி.எஸ்.கார்த்திக் – புதுக்கோட்டை மு.பஷீர் அகமது பங்கேற்பு!

குவைத், ஏப். 16- குவைத் மாநகரில் கழக அயலக அணி சார்பில் "மாநில உரிமைக்கான சட்டப் போராட்ட வெற்றி விழா" மற்றும் "தலைவர் தளபதியார் அவர்களுக்கு நன்றி பாராட்டு விழா" கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகத்தில் முதன்மை செயலாளர் பத்தமடை க.சிந்தா பக்கீர் ஒருங்கிணைப்பிலும் இணைச்செயலாளர் காட்டூர் சொ.ஆறுமுகம் பொருளாளர் ஆலங்குடி ஓவிஎஸ். கார்த்திக் தலைமை யிலும் புதுக்கோட்டை மு.பஷீர் அகமது, வேலம்புதுக்குடி மு.ஜியாவுதீன், கொளத்தூர் கணேஷ், சக்கந்தி தமிழ்ச்செல்வன், திட்டச்சேரி சாகுல் ஹமீத், சிக்கல் அஜிஸ், வரகூர் செந்தில் ராஜா ஆகியோர்களின் முன்னிலை யிலும் பல நூற்றுக்கணக்கா னோர் கலந்து கொண்டு வெற்றி விழா நிகழ்வு மிக எழுச்சியோடு மகிழ்ச்சியாக கொண்டாடப் பட்டது.

இந்நிகழ்வில் கலைஞர் நூற்றாண்டு நூலக நிறுவனர் புதுகை வீ.அருட்செல்வன், ஆலோசகர் வழுத்தூர் ஆலஞ்சியார், இணை செயலாளர் முனசந்தை சிக்கந்தர் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் வாழ்த்துரை வழங்க, கூட்டணிக் கட்சி நிர்வாகி களான விடுதலை சிறுத்தைகள் அன்பரசன், மகிழன் செல்லதுரை மனிதநேய ஜனநாயக கட்சி சதக்கத்துல்லா, அன்சாரி ,நஃபீஸ் மற்றும் உதவும் கரங்கள் மஜீத்,முபாரக், ஓட்டுனர் சேவை மையம் சையது ஜாபர் மற்றும் சமூக சேவை மைய அமைப்பினர்கள் கலந்து கொண்டு தமிழ்நாட்டின் உரிமைக்கான சட்டப்போராட்டத்தில்,

தமிழ்நாடு அரசின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெற்றுள்ள இந்த வெற்றி.. திராவிடக் கொள்கையின் வலிமையை இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கு உணர்த்தும் , ஊக்கமளிக்கும்!!

உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு நீதித் துறையின் மீது மக்கள் வைக்கும் நம்பிக்கையைக் காப்பாற்றுவதாக அமைந்துள்ளதாக வார்த்தைகளால் வர்ணித்தார்கள்.

(2) முதல்வரின் வழிகாட்டுதலோடு தமிழ்நாடு அரசின் சார்பில் முகுல் ரஹோத்கி மற்றும் ராகேஷ் த்விவேதி போன்ற மூத்த வழக்கறிஞர்களோடு இணைந்து திறம்பட இவ்வழக்கை உச்சநீதிமன்றத்தில் நடத்திய மாநிலங்களவை உறுப்பினர் அண்ணன் வின்(ல்)சன் அவர்கள் மிகத் திறம்பட வாதிட்டு இவ்வெற்றியப் பெற உழைத்ததற்காக அவர்களுக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தும் (3) கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் ஆக பொறுப்பேற்றுள்ள அண்ணன் திருச்சி சிவா எம் பி அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்து இனிப்புகள் வழங்கி கொண்டாடி மகிழ்ந்தோம்.

இந்நிகழ்வில் இளைஞர் அணி செயலாளர் காரைக்குடி செந்தில் முருகன், சிவகங்கை ஜாகிர் உசேன், கறம்பக்குடி அப்பாஸ், கார்த்திக் பாலா, புகைப்படக் கலைஞர் பக்ருதீன், திருமல்லாபுரம் முத்து மருதையா, ராஜன் ஆறுமுகம், தச்சன் குறிச்சி ஜான்பாஷா, அசன் முகமது கனி, சக்கந்தி அஜித், பத்தமடை ஜமாலுதீன், கபிலன், பத்தமடை சிந்தா மதார், முரளி, தவ்பிக், ஏர்வாடி அக்தர், என நூற்றுக்கணக்கான உடன்பிறப்புகளோடு இனிப்புகள் வழங்கி குவைத் கழக அயலக அணியின் சார்பாக வெற்றி விழாவை கொண்டாடி மகிழ்ந்தனர்.

குவைத் மாநகரில் கழக அயலக அணி சார்பில் "மாநில உரிமைக்கான சட்டப் போராட்ட வெற்றி விழா மற்றும் "தலைவர் தளபதியார் அவர்களுக்கு நன்றி பாராட்டு விழா கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகத்தில் முதன்மைச் செயலாளர் பத்தமடை க.சிந்தா பக்கீர் ஒருங்கிணைப்பிலும்! இணைச்செயலாளர் காட்டூர் சொ.ஆறுமுகம் பொருளாளர் ஆலங்குடி ஓவிஎஸ்.கார்த்திக் தலைமையிலும் புதுக்கோட்டை மு.பஷீர் அகமது, வேலம்புதுக்குடி மு.ஜியாவுதீன், கொளத்தூர் கணேஷ், சக்கந்தி தமிழ்ச்செல்வன், திட்டச்சேரி சாகுல் ஹமீத்,சிக்கல் அஜிஸ்,வரகூர் செந்தில் ராஜா ஆகியோர் முன்னிலையிலும் கொண்டாடப்பட்டது.

உச்சநீதிமன்றத்தின் உத்தரவை அடுத்து,

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜிக்கு எதிராக வழக்கு!

ஆளுநர் ஆர்.என்.ரவி அனுமதியளித்துள்ளார்!

சென்னை, ஏப். 16 - அ.தி.மு.க., ஆட்சியில் பால்வளத் துறை அமைச்சராக இருந்த ராஜேந்திர பாலாஜி, வேலை வாங்கித் தருவதாக 3 கோடி ரூபாய் மோசடி செய்ததாக புகார் எழுந்தது. இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றி அண்மையில் சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. இதற்கு எதிராக தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தது. அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி மீது வழக்கு பதிவு செய்ய ஆளுநர் அனுமதி வழங்கவில்லை என்று தமிழ்நாடு அரசு சார்பில் வாதிடப்பட்டது. இதனை அடுத்து, ராஜேந்திர பாலாஜி மீது வழக்கு தொடர அனுமதி வழங்குவது தொடர்பாக ஆளுநர் ஆர்.என். ரவி 2 வாரத்தில் முடிவு எடுக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்த நிலையில் ராஜேந்திர பாலாஜி மீது வழக்கு தொடர ஆளுநர் அனுமதி வழங்கி உள்ளார். அனுமதி வழங்கப்பட்டதை அடுத்து, ராஜேந்திர பாலாஜி மீது ஓரிரு நாட்களில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்று உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்துள்ளது.

தென்காசி வடக்கு மாவட்ட

அவைத் தலைவர் கோ.பத்மநாபன் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

தென்காசி, ஏப்.16- தென்காசி வடக்கு மாவட்டக் கழக மாவட்ட அவைத் தலைவர் கோ. பத்மநாபன் அவர்கள் (வயது 75) நேற்று (15.04.2025 செவ்வாய்க் கிழமை)காலை 11 மணியளவில் திடீரென்று மயங்கிய நிலையில் கீழே விழுந்த அவர் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தென்காசி வடக்கு மாவட்டம் குருவிகுளம் கிழக்கு ஒன்றியம் மேலத்தெரு கஸ்தூரி ரங்கபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர் தென்காசி வடக்கு மாவட்ட அவைத்தலைவர் கோ.பத்மநாபன் (வயது 75) அவர்கள் 1970 ல் இருந்து கழக உறுப்பினராக தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டார்.

மேலும் கல்லூரி மாணவராக இருந்த போது இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர் ஆவார். கலைஞர் அவர்களின் முரட்டு பக்தன் எனப்படும் முன்னாள் தூத்துக்குடி மாவட்ட தி.மு.க செயலாளர் மறைந்த என். பெரியசாமி அவர்களின் நம்பிக்கைக்குரியவராக இருந்து கோவில்பட்டி ஒருங்கிணைந்த ஒன்றிய செயலாளராக பணியாற்றியவர்.

தற்போது தென்காசி வடக்கு மாவட்ட அவைத் தலைவராக இருந்து தன்னுடைய பணியை சிறப்பாக செய்து முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களிடமும், மாவட்ட கழக நிர்வாகிகளிடமும், தொண்டர்களிடமும் நற்பெயரை பெற்றுள்ளார்.

இந்நிலையில் தென்காசி வடக்கு மாவட்ட அவைத் தலைவர் கோ.பத்மநாபன் (வயது 75) அவர்கள் நேற்று (15.04.2025)காலை 11 மணியளவில் திடீரென்று மயங்கிய நிலையில் கீழே விழுந்த அவர் இயற்கை எய்தினார்.

இது பற்றிய தகவல் அறிந்ததும் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் அன்னாரது உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.அன்னாரது இறுதி ஊர்வலம் இன்று 16.04.2025 காலை 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு அங்குள்ள இடுகாட்டில் இறுதிச்சடங்குகள் நடைபெறுகின்றன.

மறைந்த கோ.பத்மநாபனுக்கு ஜானகி அம்மாள் என்ற மனைவியும், ரமேஷ் என்ற மகனும் உள்ளனர்.

பெரம்பூர் தெற்குப் பகுதி இளைஞரணி சார்பில் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.சாம் பிளசன் தலைமையில் 44வது வட்டத்தில் கோடை வெயிலின் தாக்கத்தை போக்கும் நீர் மோர் பந்தலை மாவட்ட கழக பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ., பகுதி கழகச் செயலாளர் க.ஜெயராமன், வடக்குப் பகுதி செயலாளர் அ.முருகன், எஸ். ஆர்.கமலக்கண்ணன், எ.தமிழ்ச்செல்வன், வை.கௌதமன், ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி எம்.சி., த.ஆறுமுகம், பெரம்பூர் எஸ்.அருள், ஜி.மாரிமுத்து, வி.முருகன், சுல்சோன் சி.சுரேஷ், எச்.ராஜ்குமார், எச்.சதீஷ், இ.அந்தோனி, ஜூலியன் பால், டி.தினகரன், கார்த்திக், உமா.ஜான் மற்றும் பலர் இதில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.